18BTA64C தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் – II

இளங்கலை தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டு – 6 ஆம் பருவம்

**அலகு 1**

தமிழகத்தில் நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் சமூக நிலை

- சங்க காலம் கழிந்து களப்பிரரும் பல்லவரும் தமிழகத்தில் நுழைந்து அரசியல் செல்வாக்கு எய்திய பிறகு தமிழரின் பண்பாடுகள் புதிய வடிவங்களில் மலர்ந்தன
- வடமொழியும் ஆரிய சமயங்கள் தத்துவங்கள் ஆகியனவும் புராணங்களும் தமிழர் வாழ்வில் பல புதுமைகளை ஏற்படுத்தின
- பண்டைய பண்பாடுகளையும் ஐந்திணை வாழ்வையும் இசையையும் கூத்தையும் சங்க நூல்கள் காட்டிய அறத்தையும் வாழ்க்கை முறைகளையும் மறந்து விட்டனர். பிரிவுகளும் பிராமணர்களின் மேம்பாடும் வடமொழியின் ஏற்றமும் தமிழ்மொழி கலப்படமும் தமிழரின் சமூகத்தில் துறைகள் தோறும் ஏற்பட்டன அதனால் மக்களின் பெயர் வடிவங்களிலும் அவர்கள் எண்ணிய எண்ணங்கள் என்னும் வாழ்க்கை எனும் அரசியலிலும் புரட்சிகரமான மாறுபாடுகள் தோன்றினார் எனினும் அடிப்படைப் பண்பாடு விருந்தோம்பல் பொதுமை வேட்கை எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண வேண்டும் என்னும் துடிப்பு ஆகியவை மாறவில்லை

- பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்ததை போல அண்ணிய பழக்கவழக்கங்களும் சமயக் கருத்துகளும் தமிழ் மரபுக்கேற்ப உருமாறி எல்லாத் துறைகளிலும் ஆட்சி பெற்றன.

**சமயம்**

சங்கம் கலைந்து களப்பிரர் ஆட்சியின் போதும் பிறகும் வைதிக சமயம் சமணம் பௌத்தம் என்ற மூன்று சமயங்கள் தமிழகத்தில் வளர்ந்து வந்தன.

- சமயப் போட்டியின் தொடக்கத்தில் சமணமும் பௌத்தமும் ஏற்றம் பெற்றிருந்தன.

பிறகு நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகிய சைவ வைணவ அடியார்களின் தொண்டின் காரணமாக மேற்காண் சமயங்கள் தாழ்ந்தன. இறுதியில் பௌத்த சமயம் மறைந்து போயிற்று. புத்தர் திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டார்.

- வேந்தன் எச்சமயத்தில் ஈடுபாடு கொண்டானோ அச்சமயத்திற்கே உயர்வு கிடைத்தது.
- பதினெண்கீழ்க்கணக்கில் தொகுக்கப்பட்டுள்ள சிறுபஞ்சமூலம், ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, நாலடியார், ஆசாரக்கோவை ஆகியவை சமணர் படைத்த இலக்கியங்கள். நீலகேசி என்னும் காப்பியமும் சமண நூலாகும். தமிழ் மொழியின் வளர்ச்சியையும் வாழ்க்கையில் விழுப்பம் கொடுக்கும் ஒழுக்கத்தையும் உயிரெனப் போற்றினர். சைவ சமயக் குரவர்களும் ஆழ்வார்களும் பெருக்கிவிட்ட பக்தி வெள்ளத்தில் சமணர்கள் செயலற்றுப் போனாலும் தனக்கு ஏற்பட்ட இன்னல்களையும் இடையூறுகளையும் கடந்து மன்னர் ஆதரவையும் மக்களின் பாராட்டையும் ஈடுபாட்டையும் ஓரளவு தொடர்ந்து பெற்று வந்தனர்.

**நாயன்மார்கள்**

- சைவ அடியார்கள் வழங்கிய பக்திப் பனுவல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன..
- திருநாவுக்கரசு நாயனார் திருஞானசம்பந்தர் திருமங்கையாழ்வார் ஆகிய மூவரும் பல்லவர் காலத்து வாழ்ந்தவர்கள்.
- திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் மொத்தம் 310. அவர் தனித்தும் திருஞானசம்பந்தர் உடன் பல சிவன் கோயில்களுக்குச் சென்றும் பாடல்கள் பாடினார். ஏழை எளியவர் அனைவரும் அவருடைய அன்புக்கு ஆட்பட்டு இருந்தனர். திருநாவுக்கரசரின் தமிழ் படிப்போர் உள்ளத்தைத்தொடக்கூடியது .எல்லா உயிரினும் சிவத்தையும் சக்தியையும் இணைத்துக் காணவேண்டும் என்ற தத்துவம் இவரிடம் விளக்கம் பெற்றுள்ளது
- திருநாவுக்கரசர் உடன் இணைந்திருந்து சைவநெறி தழைத்தோங்க செய்தவர் திருஞானசம்பந்தர். மூன்றாம் ஆண்டிலேயே இவர் மெய்ஞானம் கைவரப் பெற்றார். பதினெட்டாயிரம் பாடல்கள் பாடினார் என்றும் இப்போது 384 பதிகங்களே கிடைத்துள்ளன என்றும் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது.
- தேவாரப் பாடல்கள்பாடி சைவசமயத்தை வளர்த்த சமயக்குரவர் மூவரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் பிந்தியவர் திருஞானசம்பந்தர். சிவபெருமானிடம் மகன் அன்பையும் திருநாவுக்கரசர் ஒரு தொண்டனின் அன்பையும் சுந்தரர் தோழனின் அன்பையும் கொண்டிருந்தவர்கள்.
- சைவ சமயக் குரவர்களுள் நான்காமவராகப்போற்றப்படுபவர் மாணிக்கவாசகர். இவர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. மாணிக்கவாசகரின் பிள்ளைப் பெயர் திருவாதவூரர். அரிமர்த்தன

பாண்டியனிடம் அமைச்சராகப் பணியாற்றியவர். நரியைப் பரியாக்கிய கதை இவருடையது. கன்னிப் பெண்கள் பாவை நோன்பு நோற்பது பற்றிய திருவெம்பாவை சிறப்பானது. இலங்கையிலிருந்து வந்த பௌத்தர்களை வாதில் வென்று சைவத்திற்கு வெற்றி தேடிக் கொடுத்தவர். நாட்டுப்புறப்பாடல் மெட்டுகளான உந்தி பறத்தல், தோணோக்கம், பூவல்லியாடுதல், பொன்னூசலாடுதல், அம்மானை போன்றவற்றைத் தம் பாடல்களில் பயன்படுத்தி மக்கள் மனதில் சைவசமயத்தை நிலைக்கச் செய்தவர். நானே பிரம்மம் என்ற அத்துவித வேதாந்தக் கொள்கை இவர் காலத்தில் தமிழகத்தில் சூறாவளியைப்போல் சுழன்றடித்தது. இதற்கு மாயாவாதம் என்று பெயர். இதனை நாடு முழுவதும் பரவச் செய்தவர் ஆதிசங்கரர். மறைமலையடிகள் 'மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி' எனும் தமது நூலில் மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர் இருவருக்கும் முற்பட்டவர் எனக் கூறுகிறார். ஆனால் பிற்கால ஆய்வாளர்கள் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர், நாவுக்கரசர் இருவருக்கும் முற்பட்டவராக இருந்தால் அவருடைய பாடல்கள் முதல் திருமுறையாகத் தொகுக்கப்பட்டிருக்கும். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருத்தொண்டத் தொகையில் மணிவாசகரைச் சேர்க்கவில்லை மாணிக்கவாசகர் திருக்கோவையார் வரகுண நாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலம் தான் என்று தம் காலத்து வாழ்ந்த பாண்டிய மன்னனை வாழ்த்தியுள்ளார். இவரொரு சிவபக்தன்.பிற்காலத்தவரான பட்டினத்தடிகள் இவரைப் பாராட்டியுள்ளார். பாண்டியர் பரம்பரையில் வரகுணன் என்ற பெயருடைய மன்னர் இருவர் ஆட்சி புரிந்தனர். முன்னவன் கிபி 862 - 880 ஆண்டுகளில் வாழ்ந்தவன். இவ்விருவரில் இரண்டாம் வரகுணன் திருக்கோவையார் என்னும் பட்டினத்தாரின் பாடல்களிலும் பாராட்டப்படுபவர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆதிசங்கரர் தனது சௌந்தர்ய லஹரியில் ஞானசம்பந்தரை குறித்துள்ளார். எனவே இவருடைய காலம் எட்டாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதாகும். சங்கரரின் மிண்டிய மாயா வாதம் என்ற தத்துவத்தைக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர் காலத்தால் சங்கரருக்குப் பிற்பட்டவர் என்பது பொருத்தமாகும். தேவார ஆசிரியர்கள் பாடாத கோயில்கள் பல திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளன. எனவே மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுண பாண்டியன் (கிபி 862 _880) காலத்தில் வாழ்ந்தவர் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

- சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டி ருப்பது திருமந்திரம். இதன் ஆசிரியர் திருமூலர். திருத்தொண்டத்தொகையில் நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராக வைத்து எண்ணப்படுகின்றார். 3000 செய்யுட்கள் கொண்டது. சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ளதால் திருமூலர் எட்டாம்

நூற்றாண்டுக்கு முற்பட்டவர் ஆதல் வேண்டும் ஆசிரியர்களின் பாடல்களில் காணப்படும் சொற்றொடர்களும் கருத்துகளும் திருமந்திரத்தில் பல இடங்களில் எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம். எனவே திருமூலர் கிபி ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் எனக் கொள்ளல் தகும். சித்தாந்தம் என்ற சொல்லையும் சமரச சன்மார்க்கம் என்னும் சொற்றொடரையும் முதன்முதல் ஆண்டவர் திருமூலர். சித்தாந்தம் என்னும் சொல் பிறகு சைவ சித்தாந்த நூல்களுள் சேர்ந்துவிட்டது. சமரச சன்மார்க்கம் பற்றி பிற்காலத்தவர்களான தாயுமானவரும் இராமலிங்க அடிகளும் விரித்து விளக்கியுள்ளனர். சைவ ஆகம முடிவுகளும் தந்திரங்களும் மந்திரங்களும் சக்தி வழிபாடும் திருமந்திரத்தில் மிகுதியாய் இடம்பெற்றுள்ளன. யோக நிலைகளை விளக்குகின்றது.

- பதினோராம் திருமுறையில் காரைக்கால் அம்மையார் நூல்கள் 4 இடம் பெற்றுள்ளன. இவரைச் சுந்தரர் தம் திருத்தொண்டத்தொகையில் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகப் பாடியுள்ளார். இவருடைய பாடல்களில் வடமொழிச் சொற்கள் நிரம்ப உள்ளன. எனவே வடமொழிச்சொற்கள் தமிழில் இடம்பெற்ற ஒரு காலத்தில் இவர் வாழ்ந்தவராதல் வேண்டும். எனவே காரைக்கால் அம்மையார் ஞானசம்பந்தருக்கு முற்பட்டவர் என்பதில் ஐயமில்லை. ஆகவே ஏறத்தாழ கிபி 5,6ஆம் நூற்றாண்டுகளில் இவ்வம்மையார் வாழ்ந்தவர் எனக் கொள்ளல் தகும்.

**ஆழ்வார்கள்**

- பல்லவர் காலத்தில் வைணவமும் கிளர்ச்சியுற்று எழுந்தது. இரண்டாம் நந்திவர்மன் காஞ்சிபுரத்தில் வைகுண்ட பெருமாள் கோயில் பரமேசுவர விண்ணகரம் கோயில் மதங்கீஸ்வரர் கோயில் ஆகியவற்றை எழுப்பினான். அவருடைய பட்டத்தரசி முத்தீஸ்வரர் கோயிலைக் கட்டினாள். நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தவர் திருமங்கையாழ்வார். இவருடைய பாசுரங்கள் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பெரிய திருமொழி என்னும் இரண்டாம் ஆயிரமாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- ஆழ்வார்கள் பன்னிருவர் பல குலத்தைச் சார்ந்தவர்கள் இவர்கள் பாடிய பாசுரங்கள் சேர்ந்த தொகைகளுக்கு 4000 திவ்ய பிரபந்தம் என்ற பெயர் முதலாயிரம் பெரியாழ்வார் ஆண்டாள் குலசேகரப் பெருமாள் திருமழிசையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் மதுரகவியாழ்வார் ஆகியவர்களின் பாடல்கள் அடங்கியுள்ளன. இதற்கு திருமொழி என்று பெயர்
- இரண்டாம் ஆயிரத்தில் திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் மட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்குப் பெரிய திருமொழி என்று பெயர்

- மூன்றாம் ஆயிரத்தில் பொய்கை ஆழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகியவர்களின் பாடல்களுடன் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் பாடல்கள் சிலவும் சேர்ந்துள்ளன. இதற்கு இயற்பா என்று பெயர்.
- நான்காம் ஆயிரத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாசுரங்கள் யாவும் நம்மாழ்வார் அருளியவை. இவ்வாயிரத்திற்குத் திருவாய்மொழி என்று பெயர்.

**அரசியல்**

- சங்க காலத்து மன்னர்களைப் போலவே பல்லவர்களும் கடுமையாகவே பாராட்டப்பட்டனர் அரசு கட்டிலில் உரிமை பரம்பரை உரிமையாய் இருந்து வந்தது சிலசமயம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னன் ஒருவனிடம் அரசுரிமை ஒப்படைக்கப்பட்டது
- சமயத்திலும் இறைவழிபாட்டிலும் மன்னர்கள் அளவற்ற ஈடுபாடு கொண்டனர்.
    - பல்லவ மன்னர்களுக்கு விடேல்விடுகு என்ற ஒரு விருதும் உண்டு.
    - பல்லவர்கள் நந்தி உருவம் தீட்டிய கொடியைத் தாங்கினர்.
    - அரசாங்கப் பணிகளை நிறைவேற்ற ஊழியர்கள் பலர் அமர்த்தப்பட்டனர். அவர்களுள் வாயில் கேட்பார் என்போர் தலைமைச் செயலாளருக்கு உதவி புரிந்தார். அரசாங்க மூல பண்டாரம், மாணிக்கப் பண்டாரம், காப்பான் கொடுக்கப்பிள்ளை என்பவர்களின் பொறுப்பில் செயல்பட்டு வந்தது.
    - மன்னனே நீதியின் தலைவனாகச் செயல்பட்டான். கோட்டங்களிலும் சிற்றூர்களிலும் நீதிமன்றங்கள் இயங்கின. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நீதிமன்றத்துக்கு அதிகரணம் என்று பெயர்நீதிமன்றங்கள் விகித தண்டனைக்கு காரணம் என்றும் பெயர்
    - உறவு நிலங்களும் தரிசு நிலங்களும் நிவந்தமாக அளிக்கப்பட்ட நிலங்களும் எல்லைகள் வகுக்கப்பட்டு அழைக்கப்பட்டு செப்பேடுகளிலும் குறிக்கப்பட்டன
    - அரண்மனைப் பொற்கொல்லனின் தொழில் பரம்பரை உரிமையாக பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆசனங்களைச் செப்பேடுகளில் பொறிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்த தபதி எனப்பட்டான். தானங்களையும் நிபந்தனைகளையும் ஆவண உருவத்தில் எழுதி அமைத்தவன் காரணத்தான் அல்லது காரணிகன் எனப்பட்டான்.
    - பல்லவர்கள் ஆற்றல்மிக்க கடற் படைகளை வைத்திருந்தனர் நாட்டிலும் துறைமுகங்கள் சில செழித்து விளங்கின. அவற்றுள் மாமல்லபுரம் நாகப்பட்டினம் ஆகியவை சிறப்பானவை. சீனர்களுடன் கடல் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பல்லவ மன்னர்கள்

இலங்கையின் மேல் படையெடுத்து அதற்கும் லட்சத்தீவுகளை வென்றதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

- உப்பு எடுக்கும் தொழில் மன்னனுடைய ஏகபோக உரிமையாக பாதுகாக்கப்பட்டது. கைகளில் நெசவு செய்வோர் நூல் நூற்புகள் இறக்குவோர் இடையர்கள் மேல் தொழில் வரிகள் விதிக்கப்பட்டன. இவ்வரிகளை அன்றி ஈழம்பூச்சி, இடைப்பூச்சி, பிராமணராசக்காணம், கல்யாணக்காணம், காசுக்காணம், தட்டுக்காணம், விசக்காணம், முதலிய வரிகள் விதிக்கப்பட்டன. பல்லவ மன்னர்கள் உழவுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. மிகப்பெரிய ஏரிகளைக் கட்டினர். முதலாம் மகேந்திரவர்மன் கட்டிய மகேந்திரவாடி ஏரியானது மிகவும் பெரியது. அதனுடைய மதகு நீர் ஏழு எட்டு கல் தொலைவுக்கு அப்பாலும் நிலங்களை வளர்த்தது. மாமண்டூர் ஏரி உத்திரமேரூர் ஏரி இவையும் இம்மன்னன் அமைத்தமை. தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காவேரிப்பாக்கத்தில் ஏரியைக் கட்டினான். இது 27 சதுர மைல் பரப்புள்ளது. முதலாம் பராந்தகன் காலத்தில் இவ் ஏரியின் நிர்வாகம் ஏரி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பெரும் கிணறுகள் எடுக்கப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவெள்ளறை என்னும் ஊரில் தோண்டப்பட்ட மார்ப்பிடுகு பெருங்கிணறு மிகவும் பெரியது இதன் பரப்பு 37 சதுர அடி இது ஸ்வஸ்திக வடிவத்தில் அமைக்கப் பெற்றது நாலு மூலை கிணறு எனவும் வழங்கப்பட்டதுபல அழகிய சிற்பங்கள் அணி செய்து நிற்கின்றன

தான முறைகள்

- தனக்கு உரிமையான ஒன்றையே தானமாக அளிக்க முடியும் பிராமணர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலம் பிரமதேயம் எனப்பட்டது கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தானத்துக்கு தீப போகும் அல்லது தேவதானம் எனப் பெயர் வழங்கிற்று பௌத்த சமண சமய கோயில்களுக்கும் மடங்களுக்கும் வழங்கப்பட்ட நிலம் பள்ளிச்சந்தம் எனப்பட்டது.

**ஊராட்சி முறைகள்**

- தமிழகத்தில் கிபி எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பு ஊராட்சி முறைகளைப் பற்றிய விரிவான செய்தி கிடைக்கவில்லை நந்திவர்ம பல்லவன் காலத்தில் இருந்து கல்வெட்டுகளின் வாயிலாக அவை கிடைத்து வருகின்றன தமிழகத்தைப் பற்றிய வரையில் பல்லவரின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதியானது கோட்டம் நாடு ஊர் என மூன்று பிரிவுகளுக்கு உட்பட்டிருந்தது நாட்டின் பொறுப்பை மேற்கொள்பவர் நாட்டார் ஊரின் பொறுப்பை மேற்கொள்பவர் ஊரார் என பெற்றார் மன்னன் பிறப்பித்த ஆணை திருமுகம் அல்லது கோலை எனப்பட்டது ஒருவருக்கு மாற்றி தர வேண்டிய நிலங்களின் பரப்பை

வரையறை செய்து கொடுக்கும் கட்டளைக்கு வரையோலை என்று பெயர் வழங்கிற்று.

- பிரம்மதேயம் என்ற கிராமத்தை நிர்வகிக்கும் பொறுப்பு அதனை தானமாகப் பெற்ற பிராமணரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிராமத்துக்குள் நாடு காப்பகம் எனப்படுகிற அரசாங்க அதிகாரியும் நுழையக்கூடாது. அவர்கள் செய்ய வேண்டிய பணியைத் தானும் பெற்றவர்களும் அவரது சந்ததி யாருமே கவனித்து நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அதில் நிபந்தனையாகும் மன்னனுக்கு பிரம்மதேயம் மனித திருமுகத்தை நாட்டார்கள் தலையின்மேல் வைத்து அரைஇறுதி வெளியிடுவார்கள்
- பிரம்மதேயம் மனது பிராமணரின் கிராம ஆட்சி ஊர் சபையினர் மகாசபையின் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது இவர்களை பெருமக்கள் என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன பல்லவர் ஆட்சியில் தமிழகத்தில் ஏறக்குறைய 20 வகையான சபைகள் இயங்கி வந்தன.
- இச்சபையினரின் கீழ் பல வாரியங்கள் (குழுக்கள்) செயல்பட்டு வந்தன. ஏரி வாரியம், தோட்ட வாரியம் எனப் பல வாரியங்கள் இருந்தன. வாரியங்கள் அல்லாமல் அரங்கனதர் என்னும் ஒரு குழுவினர் இருந்தனர் நிலங்களை வாங்குவதும் விற்பதும் இவர்களுடைய கடமை.

**கோயில்கள்**

- பல்லவ மன்னரும்,மக்களும் கோயில் வழிபாட்டில் மிக்க ஈடுபாடு உடையவர்கள். காஞ்சிபுரத்திலும் வேறு பல இடங்களிலும் கோயில்கள் எழுப்பப்பட்டன. கோயில் அர்ச்சகர்கள் பணி செய்வோர் கூத்திகள் ஆகியவர்களுக்கு நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன.
- தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கம் தமிழகத்தில் இருந்துள்ளது.

## சோழப் பேரரசின் தோற்றம்

விஜயாலய சோழன் (கி.பி.850-871) தஞ்சையைக் கைப்பற்றித் தன் வெற்றியின்சின்னமாக நிசும்பசூதினி என்ற கோயிலை எழுப்பினான். முழுவதும் முத்தரையரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முத்தரையர்கள் செந்தலை அல்லது நியமம் என்ற இடத்திலிருந்து தஞ்சையை ஆண்டு வந்தனர். அவர்கள் அரசியல் சூதாட்டத்தில் கை வந்தவர்கள். அவர்களின் அரசியல் சார்பு மாறிக்கொண்டே இருந்தது. பல்லவர்களுடனோ பாண்டியர்களுடனோ துணை கொண்டு பிற மன்னரை ப் பொருவார்கள்.

- பல்லவருக்கும் வரகுண பாண்டியனுக்கு மிடையே விளைந்த போரில் முத்தரையர்கள் பாண்டியருடன் இணைந்தனர் அப்போத விஜயாலயன் பல்லவருக்குத் துணை நின்று பெரும் வெற்றி பெற்று தஞ்சாவூரைக் கைப்பற்றி தன் ஆட்சிக்கு ஆக்கத்தையும் விரிவையும் தேடிக் கொண்டான். இதனால் முத்தரையரின் கை ஒடுங்கிவிட்டது.
- வரகுணன் மீண்டும் போர் தொடுத்தபோது கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதி பல்லவருக்கு உதவினான். இதற்கிடையில் விஜயாலயன் காலமானார்.
- விஜயனின் மகன் ஆதித்த சோழன் முடிசூட்டிக் கொண்டான்.
- பாண்டியருக்கும் பல்லவருக்கும் திருப்புறம்பயம் என்னும் இடத்தில் பெரும் போர் ஒன்று நிகழ்ந்தது. இப்போரில் ஆதித்த சோழன் பல்லவருடன் இணைந்தான் போரில் அபராஜிதன் வெற்றி கண்டான். இதனால் மீண்டும் சில ஊர்களை பரிசாகப் பெற்றான்.

**முதலாம் ஆதித்தன்(கி.பி. 871-907)**

- **போர்த்திறனும் அரசியல் ஆற்றலும் வாய்ந்தவன் விட வேண்டும் என்ற சீரிய நோக்கம் கொண்டவன் அன்பில் செப்பேடுகள் இவனைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன மலைகளில் இருந்து கீழே கடற்கரை வரையில் காவிரியின் இரு மருங்கிலும் சிவபெருமானுக்காக கற்றளிகள் பல எடுப்பித்தான் சோழ நாட்டின் பெரும்பகுதி பல்லவர் ஆட்சியின் கீழ் இருந்ததை கண்டு பல்லவர் உடன் போர் தொடுத்தான் உயர்ந்த யானையின்மீது இருந்து அபராஜித பல்லவனை ஆதித்தன் ஒரே வீச்சில் கொன்றதாக கன்னியாகுமரிக் கல்வெட்டு கூறுகின்றது பல்லவ அரசு கவிழ்ந்தது பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி ஆதித்தன் சோழநாட்டுடன் இணைத்துக் கொண்டான் சோழ நாட்டின் எல்லை வடக்கே ராஷ்டிரகூடர்களின் ஆட்சி வரை எட்டி நின்றது (கிபி 890).**
- **ஆதித்தன் கண்டவெற்றிக்கெல்லாம் கங்கர்கள் துணை நின்றனர். ஆதித்தன் ராஜகேசரி என்ற விருது ஒன்றை ஏற்றான் பல்லவ இளவரசி ஒருத்தி ஆதித்தனுக்கு மணமுடிக்க பெற்றாள். இராஷ்டிரகூட மன்னன் இரண்டாம் கிருஷ்ணன் என்கிற வல்லவரையன் மகள் இளங்கோ பிச்சி. அவளை ஆதித்தன் தன் பட்டத்தரசியாக ஏற்றுக்கொண்டான்.**
- **கொங்கு நாட்டில் ஆதித்தனின் கல்வெட்டுகள் கிடைப்பதில் இருந்து கொங்கு தேசத்தையும் தன் ஆட்சியின் கீழ்இணைத்துக் கொண்டான் எனத் தெரிகிறது.**

- இவன் தலைக்காடு என்ற ஊரை கைப்பற்றினான் என்று கொங்கு தேச ராஜாக்கள் என்னும் நூல் குறிப்பிடுகின்றது. ஆதித்தன் கொங்கு நாட்டில் இருந்து கைப்பற்றிய பொன்னைக் கொண்டு தில்லை அம்பலத்திற்குக் கூரை வேய்ந்தார் என்று நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார்.
- ஆதித்தன் சேர மன்னன் தாணுரவியுடன் நல்ல நட்புறவு கொண்டிருந்தான்
- காலத்தை அடுத்துள்ள தொண்டை நாடு என்ற இடத்தில் ஆதித்தன் இம்மண்ணுலகில் நீதான்.
- அவனுக்கு பராந்தகன் கன்னரதேவன் என்ற இரு மக்கள் இருந்தனர் கண்னர தேவன்இளங்கோன் பிச்சி வயிற்று மகன்.
- ஆதித்தனுக்கு பிறகு முடி சூட்டிக்கொண்ட பராந்தகன் தன் தந்தையின் சமாதியின் மேல் கோதண்டராமேச்சுரம் என்ற கோயிலை எழுப்பினான் ஆதித்தனுடைய காலத்திலிருந்தே சோழப் பரம்பரையானது சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தது.

  பராந்தகன் (கி.பி.907-955)
- இவன் ஆட்சியின்போது சோழநாட்டின் வட வெல்லை காளத்தி வரையிலும் தெற்கில் காவிரி வரையிலும் விரிவடைந்திருந்தது மைசூர் பீடபூமி கேரள கடற்கரையும் சோழ அரசுக்கு புறம்பாக நின்றன.
- பராந்தகனின் ஆட்சி 48 ஆண்டு காலம் நீடித்தது. பராந்தகன் பாண்டியரைப் பணிய வைத்து தன் ஆட்சியைத் தெற்கில் கன்னியாகுமரி வரையில் விரிவடையச்செய்தான். தனது மூன்றாம் ஆட்சியாண்டில் பராந்தகன் பாண்டி நாட்டின் மேல் படை எடுப்பு ஒன்றை நிகழ்த்தினார்.
- பராந்தகனை எதிர்க்க முடியாமல் இலங்கைக்கு தப்பி ஓடிய மன்னன் பாண்டியன் ராஜசிம்மன் என்று சின்னமனூர் உத்திரமேரூர் செப்பேடுகளில் இருந்து அறியவருகிறது. ஓடியா மன்னன் பாண்டியநாட்டின் செங்கோலையும் மணிமுடியையும் எடுத்து சென்று விடுகிறான்.
- கேரள மன்னனும் கீழப்பழுவூரைச் சேர்ந்த பழுவேட்டரையரும் கொடும்பாளூர் வேளிர்களும் பராந்தகனுக்குத் துணை புரிந்தார்கள்.
- பராந்தகனின் மக்களில் ஒருவனான அருள் கேசரி கொடும்பாளூர் பரம்பரையைச் சார்ந்த தென்னவன் இளங்கோ வேணாம் மேலான் என்பவனின் மகள் ஆதிச்ச பிடாரியை மணம் புரிந்துகொண்டான். வைதும்பர் ஐ வென்று வெற்றி வாகை சூடினார்.

- **தனக்குத் திறை செலுத்தியவானகோவரையரின் துணையுடன் சோழ நாட்டின் மீது போர் தொடுத்தான்.கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதி பராந்தகனுக்கு உதவி திருவல்லத்தில் படைகள் மோதின. பராந்தகன் வெற்றி பெற்றான்.**
- **பழைய பரம்பரையைச் சார்ந்த வானவர்கள் திருக்காளத்தி வடக்கே அரசாண்டு வந்தனர் பராந்தகன் காலத்தில் இவர்களுடைய ஆட்சி பாலாற்றுக்கு வடக்கிலே உங்களுக்கும் காலத்திற்கும் இடையில் பெரும் பாடி என்று பெயர் பெற்ற நிலப்பரப்பாக விளங்கி 200 ஆண்டு காலம் நிலைத்து நின்றது.இப் பரம்பரையில் இறுதியாக அரியணையேறிய மன்னன் மூன்றாம் விக்கிரமாதித்தன் இவன் ராசு கூற மன்னன் கிருஷ்ணனுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார்**
- பகைப் புயலை அடக்க திருமுனைப்பாடி நாட்டில் தன் மூத்த மகன் ராசாதித்தனைப் பெரும்படையின் தலைமையில் நிலைப்படுத்தி இருந்தான்.
- முதலாம் பராந்தகன் கிபி 955 வரை உயிர்வாழ்ந்து இருந்ததாக கல்வெட்டுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.